# கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அல்லது மறுவருகை என்று தலைப்பிடுவதின் காரணம்... அவர் ஏற்கனவே இந்த உலகத்திற்கு வந்து விட்டார். அவ்வப்போது 'தியோபெனிஸ்' – அதாவது கர்த்தருடைய தூதனானவராக அவர் தோற்றம் அளித்தது என்பது வேறு. அவர் ஏற்கனவே இந்த உலகத்தில் மானிடனாக பிறந்து 33½ ஆண்டுகள் வாழ்ந்து பரமேறி சென்றிருக்கிறார்; மட்டுமல்ல மீண்டும் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். எனவே அவருடைய அந்த வருகையை நாம் இரண்டாம் வருகை என்று சொல்லுகிறோம். அவருடைய முதல் வருகை பற்றி என்னவென்றால்... அவர் ஏற்கனவே இருந்தவர். இருக்கிறவராகவே இருக்கிறேன் என்பது அவருடைய பெயர்... அதன்மூலம், அவருடைய பிறப்பைக்கூட அவருடைய வருகையாகத்தான் கணக்கிடமுடியும். தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் (1 தீமோத்தேயு 3:16) என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது, ஏற்கனவே இருக்கிற ஒருவர்தான் வெளிப்படமுடியும். அதேபோல யோவான் 1:14 ம் வசனத்தில் அந்த வார்த்தை மாம்சமாகி, என்பதைப் பார்க்கிறோம். ஆக, ஏற்கனவே வார்த்தையாக இருந்தவர் மாம்சமானார். அவருடைய மானிடப்பிறப்பு என்பது நம்மைப்போன்ற பிறப்பு என்கிற நிலைமையிலே மட்டுப்படுத்தப்படாமல் அது அவருடைய வருகை என்றுதான் குறிப்பிடவேண்டியதாகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக... இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார் (மீகா 5:2) என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த பிரபு பெத்லகேமில் இருந்து புறப்படவேண்டும் என்பது இறைநோக்கம் எனவே அவர் அங்கிருந்து புறப்பட்டார் ஆனால் அதே வசனத்தில் அந்த புறப்பாடு அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே அவர் பிறப்பதற்கு முன்பாகவே இருந்தவர் என்பதால் அவருடைய பிறப்பை நாம் மற்ற மனிதர்களின் பிறப்பைப்போல சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் ஒரு வருகையாக கணக்கிடுகிறோம்.

## 1. இரண்டாம் வருகையின் இரு கட்டங்கள்

அவருடைய இரண்டாம் வருகையானது இரண்டு கட்டங்களாக நிகழும். ஒன்றுக்கு இரகசிய வருகை என்றும்; இன்னொன்றுக்கு பகிரங்க வருகை என்றும் பெயர்.

## 2. இரண்டு வருகைக்கும் உள்ள வித்தியாசம்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் முதல் கட்டத்தைப் பற்றி (Rapture – எடுத்துக்கொள்ளப்படுதல்) பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் இல்லை. ஆனால் இரண்டாம் கட்டமான மகிமையான வெளிப்படுதல் (Revelation) பற்றி ஏராளமான தீர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் இருக்கின்றன. முதல் கட்டமானது அப்போஸ்தலர்கள் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட ஒன்று. எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) என்பது கிறிஸ்துவானவர் வானமண்டலத்தில் இறங்கி வருவதாகும்! அவருடைய கால்கள் பூமியில்படாது. ஆனால் வெளிப்படுதல் (Revelation) என்பது ஒலிவமலையில் அவர் வந்து இறங்குவார். அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும் (சகரியா 14:4). கிறிஸ்துவின்

வருகைதான் திருச்சபையின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புமாக இருக்கிறது. அவர் மரித்தோரிலிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே (1 தெச 1:10).

## 3. கிறிஸ்துவின் வருகையில் என்ன சம்பவிக்கும்?

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக மேகங்கள்மேல், அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம் (1 தெச 4:16,17). அதன்பிறகு பூமியிலே உபத்திரவ காலம் தொடங்கும்.

எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) என்பதற்கான மூலச்சொல் 'ஹர்பாஸோ' (Harpazo) என்பதாகும். இதனுடைய பொருள் எடுத்துக்கொள்ளுதல் (அ) தட்டிப்பறித்தல் (அ) பலவந்தமாக பறித்துக்கொள்ளுதல் என்பதாகும். அதாவது தனக்கு சொந்தமான ஒரு பொருளை பறித்துக்கொள்வது என்பது அதனுடைய சரியான பொருளாக இருக்கிறது. இதற்கு லத்தீன் மொழியில் 'Rapio' என்ற பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது; அதிலிருந்து தழுவியதுதான் இந்த ஆங்கில வார்த்தையான Rapture என்பதாகும். ஆனால் தமிழில் இது இரகசிய வருகை என்று கூறுவதின் காரணம் அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கு எழுதும்போது இப்படியாக எழுதுகிறார்: இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி 15:51). அதுவே தமிழில் இது இரகசிய வருகை என்று அறியப்படுகிறது.

## 4. மரணம் ஏன் நித்திரையாக கருதப்படுகிறது?

இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார் (1 தெச 4:14). மரிக்கமுடியாத (அ) மரணத்தை காணாத கிறிஸ்தவினுடைய மரணத்தை குறித்து நேரடியாகவே 'அவர் மரித்தார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆனால் மரிக்கவேண்டிய நம்முடைய மரணத்தை குறித்து 'அவர்கள் நித்திரையடைந்திருக்கிறார்கள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. லாசருவை குறித்து செல்லும்பொழுதும் "நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன்" என்றார் (யோவான் 11:11). யவீருவின் மகளைக் குறித்துச்சொல்லும் பொழுதும் "பிள்ளை மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்" என்றார் (மாற்கு 5:22). ஸ்தேவானுடைய மரணத்தைக்குறித்து சொல்லும்பொழுதும்: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான் (அப் 7:60). அதுமாத்திரமல்ல

கர்த்தருடைய பந்தியில் அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிற… அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள் என்று 1 கொரிந்தியர் 11:30 ல் வாசிக்கிறோம். ஆகவே கிறிஸ்து நம்முடைய மரணத்தில் இருந்து நம்மை மீட்கவே அவர் மரித்தார் ஆகவேதான் நம்முடைய மரணம் நித்திரையாக கருதப்படுகிறது.

## 5. ஏறிச்செல்லும் திருச்சபை

வெளிப்படுத்தின விசேஷம் இரண்டு மற்றும் மூன்றாம் அதிகாரங்களில் சபைக்கான காரியங்களைச்சொல்லி முடித்த பிற்பாடு… இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன். முன்னே எக்காளசத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: இங்கே ஏறிவா, இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது (வெளி 4:1). இங்கு யோவானுக்கு ஒரு வாசல் காண்பிக்கப்படுகிறது. யோவான் 10:7ன் அடிப்படையில் இயேசுவே வாசலாக இருக்கிறார். யோவான் 14 ஆம் அதிகாரத்திலும் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரமுடியாது என்று சொல்லி குறிப்பிடுகிறார்.வெளிப்படுத்தின விசேஷத்தில் சபையை குறித்ததான குறிப்புகள் சொல்லிமுடிந்த பிற்பாடு நான்காம் அதிகாரத்திலிருந்து 19ம் அதிகாரம் வரைக்கும் உபத்திரவ காலத்தை நிகழ்ச்சிகளை யோவானுக்கு தரிசனமாக காட்டுகிறார்.

## 6. மூவகை ஓசைகள்

கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார் (1 தெச 4:16). இந்த சத்தத்தை உலக மக்கள் கேட்பார்களா என்கிற விபரம் இல்லை. ஆனால் இது இரகசிய வருகை என்று அறியப்படுவதினால் விசுவாசிகள் மட்டும் இந்த சத்தத்தைக் கேட்கமுடியும். பவுல் தமஸ்குவுக்குப்போகும் வழியில் கர்த்தர் அவனோடு பேசினதை அவன் மட்டுமே கேட்டானே தவிர மற்றவர்கள் அதைக் கேட்கவில்லை (அப் 22:7,9). எனவே இவைகளை கொண்டு இந்த மூவகை ஓசைகளை விசுவாசிகள் மட்டுமே கேட்கமுடியும் என்று அறிந்துகொள்ளலாம்.

a. **ஆரவாரம்** என்கின்ற வார்த்தை மூலமொழியில் 'கெலேஷ்மா' என்கின்ற பதமானது பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கான பொருள் 'எச்சரிக்கையாயிரு' என்கின்ற கட்டளை வாக்கியமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. மரித்த லாசருவை நோக்கி: லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார் (யோவான் 11:43). நாயீன் என்னும் ஊரில் விதவையின் மரித்துப்போன மகனை பார்த்து: வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார் (லூக்கா 7:14). மரித்துப்போன யவீருவின் மகளிடம்: சிறுபெண்ணே எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் (மாற்கு 5:41) என்றார்.
b. **பிரதான தூதனுடைய சத்தம்** – இந்த பிரதான தூதன் மிகாவேல் (யூதா 9) ஆக இருக்கலாம். இந்தப் பிரதான தூதன் தேவதூதர்களின் சேனைகளை ஒன்றாகக் கூட்டிச் சேர்த்து நம்மை கிறிஸ்துவோடு அழைத்துச் செல்வதற்காக வரலாம். அல்லது வானமண்டலங்களில் இருக்கின்ற

பொல்லாத ஆவிகளோடுகூட இருக்கக்கூடிய போராட்டத்தை நீக்கி தடையில்லாமல் கிறிஸ்து நம்மை அழைத்துச்செல்வதற்காக இருக்கலாம்.

c. **தேவ எக்காளம் –** இந்த எக்காள சத்தத்தை வேதவசனத்திற்கு உருவகப்படுத்தலாம். <u>உ.ம்:</u> கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல்.. (1 தெச 1:8). ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம் (1 கொரி 15:51). பொதுவாகவே எக்காளமானது போர்க்களத்திலே அனைவரையும் கூட்டி சேர்ப்பதற்காக ஊதப்படும் அதுபோல நம்மை ஒன்றாகக் சேர்ப்பதற்கு இந்த எக்காளம் ஊதப்படுகிறது.

## 7. எடுத்துக்கொள்ளப்படுதலையொட்டி நிகழும் நிகழ்வுகள்

**a. நாம் எடுத்துக்கொள்ளப்பட்ட உடனே கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போம்**

i. உக்கிராணக்காரனாக கணக்கு ஒப்புவிக்க நிற்போம் (ரோமர் 14:10–12).

ii. ஒரு கட்டட பணியாளனாக கூலி பெறுவதற்காக அவருக்கு முன்பாக நிற்போம். ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும் (1 கொரி.3:12–15).

iii. ஒரு பந்தய வீரனாக கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக பரிசைப் பெற்றுக்கொள்ள நிற்போம். பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள் (1 கொரி 9:24).

**b. கிறிஸ்துவினிடத்திலிருந்து சில கிரீடங்களையும் நாம் பெற்றுக்கொள்ளுகிறவர்களாக காணப்படுவோம்.**

i. அழிவில்லாத கிரீடத்தை ஒரு பந்தய வீரன் பெற்றுக்கொள்கிறான் (1 கொரி 9:24,25).

ii. இரத்த சாட்சிகளாக மரித்தவர்கள் ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்வார்கள் (வெளி 2:10)

iii. கர்த்தருக்காக உண்மையும் உத்தமமாய் ஊழியம் செய்த ஊழியக்காரர்கள் நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்வார்கள் (2 தீமோ 4:8)

iv. ஆத்தும ஆதாயம் செய்கிறவர்கள் மகிழ்ச்சியின் கிரீடத்தை பெற்றுக்கொள்வார்கள் (1 தெச 2:19)

v. மூப்பர்கள் அல்லது மேய்ப்பர்கள் என்கிறவர்கள் மகிமையுள்ள வாடாத கிரீடத்தை பெற்றுக்கொள்வார்கள் (1 பேதுரு 5:4)

c. **ஆட்டுக்குட்டியானவரின் திருமணம்**

மணவாட்டியாகிய திருச்சபையானது மணவாளனாகிய கிறிஸ்துவுடன் சேர்க்கப்படுதலே இந்த நிகழ்ச்சி ஆகும். இந்த நிகழ்ச்சியானது மத்திய ஆகாயத்திலே நடக்கும்.

## 8. எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும் காலம்

i. இது எப்பொழுது நடக்கும் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. சிலர் ஏழு ஆண்டுகளின் உபத்திரவ ஆட்சிக்காலம் முடிந்த பிறகுதான் சபை எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறுகிறார்கள். சபை உபத்திரவத்தின் ஊடாக கடந்து செல்லும் என்பது இவர்களுடைய கொள்கை. இது தவறான கொள்கை ஆகும்.

ii. வேறு சிலர் ஏழு ஆண்டு கால உபத்திரவத்தின் மத்தியில் அதாவது 3 1/2 ஆண்டுகளின் நடுவிலே திருச்சபையானது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லுகிறார்கள். இதுவும் தவறான கொள்கையாகும்.

iii. இன்னும் ஒரு சிலர் உபத்திரவ ஆட்சி காலத்திற்கு முன்பாக ஆயத்தமாக இருக்கும் விசுவாசிகள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் மற்றவர்கள் உபத்திரவ காலத்தின்பொழுது கொஞ்சம் கொஞ்சமாக எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்று கூறுகிறார்கள். இதுவும் தவறான கொள்கையாகும்.

iv. ஆனால் சபையானது உபத்திரவ காலத்திற்கு முன்பாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதுதான் வேதத்தின் ஆதாரமாக இருக்கிறது. ஏனெனில் உபத்திரவ காலத்தின்போது சபையானது இந்த பூமியில் இருக்கும் என்பதற்கு எந்த ஒரு ஆதாரமும் இல்லை.

## 9. கிறிஸ்துவின் பகிரங்க வருகை

இது இரண்டாம் வருகையின் இரண்டாம் கட்டமாகும். உபத்திரவ காலத்திற்குப்பின் மற்றும் ஆயிரம்வருட அரசாட்சிக்கு சற்று முன்பாக, கர்த்தர் தமது பரிசுத்தவான்களோடு கூட இந்த பூமிக்கு இறங்கி வந்து **புறஜாதி நாடுகளை நியாயம் தீர்ப்பார்.** உபத்திரவ காலத்தின் போது இந்த புறஜாதி மக்கள் கிறிஸ்துவை விசுவாசிக்காததினால் இஸ்ரவேல் மக்களோடு நடந்துகொண்ட நடத்தையின் அடிப்படையில் அவர்களை நியாயம் தீர்ப்பார் (எசேக்கியேல் 38,39 அதிகாரங்கள்). அப்படியாக அவர் நியாயம் தீர்த்து தன்னுடைய அரசை (1000 வருட ஆட்சி) இந்த பூமியிலே நிலைநாட்டுவார். ஒரு கல் கையால்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் (தானியேல் 2:44,45). **மகிமையின் சிங்காசன நியாயத்தீர்ப்பு** (மத் 25 அதி). இது உபத்திரவ ஆட்சி காலத்தின் முடிவிலும் ஆயிரம் வருட அரசாட்சிக்கு முன்பும் நடக்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது; இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார்; அவர் சர்வவல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார் (வெளி 19:15).